Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 11 (L.W. 16 ) } Prosecution } Defence }

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திரு.சக்திவேல் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 17.12.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நல்லம்பள்ளி வட்டம், கோணங்கிஅள்ளி கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2022ம் வருடம்

கலப்பம்பாடி கிராம உதவியாளராக பணிபுரிந்த போது 29.05.2022 அன்று கோவள்ளிகோம்பை பேருந்து நிறுத்ததில் ஒரு கொலை நடந்ததாக தகவல் வந்தது. நாங்கள் சம்பவ இடத்திற்கு வந்தோம். உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தோம். மதியம் 03.30மணியளவில் குபேந்திரன் என்பவரை மேச்சேரி ரோட்டில் உள்ள பழையூர் செக்போஸ்ட் அருகில் பிடித்து வைத்திருப்பதாகவும் ஏரியூர் இன்ஸ்பெக்டர் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்தார். பிறகு நானும், கிராம நிர்வாக அலுவலரும் பழையூர் செக்போஸ்ட் அருகே சென்றோம். அப்போது குபேந்திரன் கந்தசாமியை கொலை செய்ததாக வாக்குமூலம் கொடுத்தார். தான் கொலைக்கு பயன்படுத்திய கத்தியை ஆஜர்படுத்துவதாக சொன்னார். அவர் சொன்னதை போலிசார் பதிவு செய்து கொண்டார்கள், அதில் நானும், எனது கிராம நிர்வாக அலுவலரும் சாட்சி கையெழுத்து போட்டோம்.

2) பின்பு 4.40மணியளவில் நாங்கள், போலிசார், குபேந்திரன் குண்டுபெருமாள் கோவில் அருகே சென்று அங்கிருந்த புதரில் 4 முழ வேட்டி ஒன்றும், வெள்ளை கலர் அரைகை சட்டை ஒன்றும், கத்தி ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததற்கு என்னிடமும், விஏஓவிடமும் கையெழுத்து வாங்கினார்கள். TN 29 AF 3588 பஜாஜ் டிஸ்கவர் இரு சக்கர வாகனத்தை பழையூர் செக்போஸ்ட் அருகே கைப்பற்றினார்கள்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து **அ.சா.ஆ. 7** ஆகவும், **(எதிரி தரப்பில் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி எதிரி தன்னை அழைத்து சென்றால் சான்று பொருள்களை எடுத்து கொடுப்பதாக சொல்லவில்லை ( Disclosure statement ) சொல்லாததால் இதை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை செய்தார், அவரது ஆட்சேபனைக்கும், நிருபணத்திற்கும் உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)** பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜா **அ.சா.ஆ.8** ஆகவும், இரு சக்கர வாகனத்தின் புகைப்படம் **அ.சா.ஆ.9** ஆகவும், கத்தி வேட்டி, சட்டை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. கத்தி ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4 முழ வேட்டி **சா.பொ.7** ஆகவும், வெள்ளை கலர் அரைகை சட்டை **சா.பொ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி நீதிமன்றத்தில் இருக்கும் எதிரியை அடையாளம் காட்டுகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கலப்பம்பாடியில் டிசம்பர் 2021லிருந்து 2022 செப்டம்பர் வரை வேலை செய்தேன். விஏஓ இல்லை என்றால் அவரது பணியை கிராம உதவியாளர் என்ற முறையில் நான் செய்ய வேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது விஏஓ பென்னாகரத்தில் குடியிருந்தார், நான்

தான் விஏஓவிற்கு தகவல் சொன்னேன். நான் கலப்பம்பாடி கிராமத்தில் குடியிருக்கவில்லை. நல்லம்பள்ளி தாலுக்கா, கோணங்கிஅள்ளி ஏறுபள்ளியில் குடியிருந்து வந்தேன். காலை 6, 6.10மணிக்கெல்லாம் தகவல் கிடைத்தது. உடனே சம்பவ இடத்திற்கு காலை 7 மணிக்கெல்லாம் வந்து விட்டேன். விஏஓ 7.10மணிக்கு வந்தார். நான் வருவதற்கு முன்பாகவே விஏஓ, போலிசார் இருந்தார். ஊர்காரர்கள் 50, 60 பேர் இருந்தார்கள். விஏஓ சென்று புகார் கொடுத்தார். எத்தனை மணி என்று நியாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திலேயே இருந்தேன். விஏஓ கொடுத்த புகாரில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று தெரியாது. விஏஓ கொடுத்த புகாரில் அடையாளம் தெரியாத நபா் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

2) பகல் 2 மணியளவில் பிரேதத்தை எடுத்து சென்றார்கள். சாலை மறியல் 4, 5 மணிநேரம் செய்தார்கள். எஸ்பி. வந்து சமாதானம் செய்த பிறகு தான் சாலை மறியலை கைவிட்டு போனார்கள் என்றால் சரிதான். போலிசாா் சென்ற பிறகு நானும், விஏஓவும் 3.30மணி வரை சம்பவ இடத்திலேயே இருந்தோம். பிறகு நானும், விஏஓவும் பழையூர் செக்போஸ்ட் அருகே போனோம். சம்பவ இடத்திலிருந்து பழையூர் செக்போஸ்ட்டிற்கு நேரடியாக போனோம், வேறு எங்கும் தங்கவில்லை. கோவள்ளிகோம்பைக்கு அடுத்ததாக மேச்சேரி - பென்னாகரம் சாலையில்

முதலில் சின்னம்பள்ளி, அடுத்தது பெரும்பாலை, அதற்கு அடுத்து தான் பழையூர் செக்போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். சின்னம்பள்ளியிலிருந்து அரக்காசனஅள்ளி, தருமபுரி செல்லும் ரோடுள்ளது என்றால் சரிதான். பெரும்பாலையிலிருந்து ஏரியூர் போவதற்கு ரோட்டிலிருந்து வழி உள்ளது என்றால் சரிதான். கோவள்ளிகோம்பை ஊருக்குள் போக வேண்டும் என்றால் அந்த ரோட்டின் வழியாக போய் அதே வழியாக தான் திரும்ப வரவேண்டும் என்றால் அது மலைபகுதி, கலப்பம்பாடி காப்புகாடு பகுதி.

3) சம்பவம் நடந்த அன்று நான் குபேந்திரனின் வீட்டை சென்று பார்த்தேன். குபேந்திரன் வீட்டிற்கு போய் வரவேண்டும் என்றால் போன ரோட்டிலே தான் திரும்ப வரவேண்டும், சம்பவ இடத்தை தாண்டி தான் வேறு இடத்திற்கு போக முடியும். பழையூர் செக்போஸ்ட் போகும் போது 3.30மணியிருக்கும். அங்கு 40 நிமிடம் இருந்தோம். பிறகு குண்டுபெருமாள் கோவில் போனோம். பழையூர் செக்போஸ்ட்டில் எத்தனை கையெழுத்து போட்டோம் என்று நியாபகம் இல்லை, எல்லா கையெழுத்துக்களையும் அங்கே தான் போட்டோம். பிறகு நாங்கள் சம்பவ இடத்திலேயே இரவு முழுவதும் அங்கேய இருந்தோம். குற்றவாளியை கைது செய்ய வேண்டும் என்று சாலை மறியல்

செய்தார்கள். சாலை மறியலுக்கு பிறகு நான் அங்கேயே தான் இருந்தேன்.

*4)* நான் சொல்வது போல் பழையூர் செக்போஸ்ட்கோ, குண்டுபெருமாள் கோவில் அருகே போக வில்லை என்றாலும், என் முன்னிலையில் யாரும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், எல்லா ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

Deposition of P.W. 12 (L.W.21 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.பெருமாள்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :
Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 17.12.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரும்பாலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் பெரும்பாலை காவல் நிலையத்தில் முதுநிலை காவலராக பணிபுரிந்த போது 29.05.2022 அன்று

பெரும்பாலை காவல் நிலைய குற்ற எண் 72/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரையும் விரைவு தபால் மூலம் கடவு சீட்டு பெற்று கொண்டு பென்னாகரம் குற்றவியல் நடுவர் அவர்களிடம் ஒப்படைத்தேன். பின்பு நிலையம் வந்து அறிக்கை செய்து கொண்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்று சரியாக நியாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கை வாங்கிய ஒரு மணி நேரத்தில் பென்னாகரம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து விட்டேன், நீதிபதி அவரது குடியிருப்பில் இருந்தார். 3.20மணிக்கு நீதிபதி பெற்று கொண்டதாக கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். 10.00மணிக்கு பாஸ்போர்ட் கொடுத்தார்கள். முதல் தகவல் அறிக்கை தயார் செய்து என்னிடம் கொடுப்பதற்கு 2 மணியாகி விட்டது. பெரும்பாலை காவல் நிலையத்திலிருந்து பென்னாகரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 26 கிமீ தூரத்தில் உள்ளது. நான் காவல் நிலையத்திற்கு பஸ்சில் தான் சென்றேன். என் கையில் முதல் தகவல் அறிக்கை கொடுத்த உடனே தாமதம் இல்லாமல் கொடுத்து விட்டேன்.

Sd/Tmt.U.Monica,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W. 13 (L.W.25 ) | } | Defence |
| | } | |

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திரு.சரவணன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 17.12.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெரும்பாலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஏரியூர் காவல் நிலைய ஆய்வாளரின் உத்திரவு படி பெரும்பாலை காவல் நிலைய குற்ற எண் 72/2022 சட்டபிரிவு 341, 302 வழக்கில் கொலையுண்டு இறந்து போன கந்தசாமி பிரேதத்தின் மீதிருந்த உடைமைகள் மற்றும் ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண், எதிரி கொலை செய்ய பயன்படுத்திய கொடுவாள், சம்பவத்தின் போது எதிரி அணிந்திருந்த உடைமைகளை நீதிமன்றத்திலிருந்து பெற்று வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் 15.06.2022ல் ஒப்படைத்து ரசீது பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்து கொண்டேன். பின்னர் ரசாயன பகுப்பாய்வு அறிக்கையை தருமபுரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெற்று பென்னாகரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ,, இல்லை

Sd/Tmt.U.Monica,
Additional District Judge,
Dharmapuri.